# மாங்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07.03.2024ம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு நகராட்சி நகரமன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக் கூட்டப்பொருள் நடவடிக்கை விவரம்.

---

**குறள் :** அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

**விளக்கம்:** அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை:

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் ஜனவரி 2024 மற்றும் பிப்ரவரி 2024 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஜனவரி 2024 மற்றும் பிப்ரவரி 2024 மாதங்களுக்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

**மாங்காடு நகராட்சியின் பொது நிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதி கணக்குகளின் வரவு செலவு திட்டத்தின்** 2023-2024ம் **ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும்** 2024-2025ம் **ஆண்டின் திட்ட மதிப்பீடு** (Budget) **நகர்மன்றத்தின் பார்வைக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட மாங்காடு 'ஆ' கிராம புல எண்.473/3A1-ல் உள்ள 3507ச.மீ. (86.63செண்ட்) இடத்தின் உரிமையாளர் திரு.ஜி.கணேஷ்பாபு, முகவராக மனைப்பிரிவு அமைக்க திருவாளர் ஆலம் புரோமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்., உரிமையாளர் திரு.கே.மோதிஷ்குமார் அவர்களின் விண்ணபத்தின் பேரில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழு கடிதம் எண்.Layout-1/0276/2023, நாள்.20.11.2023 ன்படி மேற்படி மனைப்பிரிவில் 24 மனைகள் கொண்ட மனைக்கு திட்ட அனுமதி எண்.15585, PPD/LO No.266/2023 ன்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைபிரிவில் 708ச.மீ சாலைகள் மற்றும் (PP-1) 18ச.மீ பொது உபயோகத்திற்காகவும் (PP-2) 18ச.மீ மின்சார வாரியத்திற்காகவும் இரண்டு திறந்த வெளிகள்

தானப்பத்திரபதிவு எண் முறையே 22517/2023 மற்றும் 22533/2, நாள்.09.11.2023ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேற்காணும் மனைப்பிரிவுக்கு சாலை, மழைநீர் வடிகால், தெருவிளக்கு, குடிநீர் ஆகிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் மதிப்பீடுகள் தயாரித்து மனை உரிமையாளருக்கு இதே கோப்பு எண்ணிட்ட நாள்.03.02.2024ம் தேதிய கடிதத்தின்படி கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டு மனைப்பிரிவு அபிரிவிருத்தியாளரால் சாலை பணி மட்டும் செய்து முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகளுக்கு செ.எண்.130/001/01/23–24/0008500 நாள்.19/02/2024ன் படி ரூ.20,70,000/– இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு உள்ளது. மேலும் இந்நகராட்சி பொறியியல் பிரிவால் சாலைப்பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளது என சான்று அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவு அங்கீகரிக்க உண்டான அனைத்து கட்டணங்களும் இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி மனைப்பிரிவிற்கான அடிப்படை வசதிகளுக்கு உண்டான உரிய கட்டணங்கள் உள்பட அனைத்து கட்டணங்களும் வசூலிக்கப்பட்டு பொது ஒதுக்கீடுகளுக்கான தானப்பத்திரங்கள் பெறப்பட்டு உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் எண்.6

மாங்காடு நகராட்சியில் 15th CFC (Health) 2023–2024 திட்டத்தின் கீழ் 2வது வார்டிற்குட்பட்ட அசோக் அவென்யூ ரகுநாதபுரம் பகுதியில் அரசு துணை சுகாதார நிலையம் அமைக்க உள்ள இடத்திற்கு பொது மக்கள் சென்றுவர சிரமமாக இருக்கும் என்பதால் அதனை மாற்றி 1, 2, 3, 4, 14 மற்றும் 15வது வார்டு பொது மக்களும் பயன்பெறும் வகையில் அதே வார்டில் உள்ள திருவள்ளுவர் சிட்டி பேஸ்–2 பகுதியில் துணை சுகாதார நிலையம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.7

மாங்காடு நகராட்சியில் ஆறாவது மாநில நிதிக்குழு 2023–2024ஆம் ஆண்டின் கீழ் ரூ.150.00லட்சம் மதிப்பீட்டில் சக்ரா நகர் பகுதியில் சமுதாயக்கூடம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்வதற்கு ஏதுவாக கீழ்கண்ட பரிசோதனைகள், கட்டிட வடிவமைப்பு, விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்ய வேண்டி உள்ளது. பின்வருமாறு,

1. மண் பரிசோதனை மேற்கொள்ள 3 இடங்களில் போர் அமைத்து மண் மாதிரியை எடுத்து பரிசோதனை கூடத்திற்கு அனுப்புவதற்கு ரூ.27000/–.
2. மண் பரிசோதனை செய்து தர ஆய்வு கூடத்திற்கு மன் மாதிரி ஒன்றிக்கு ரூ.50000/– வீதம் 3 மண் மாதிரிகளுக்கு ரூ.150000/–.
3. கட்டிட வடிவமைப்பு தயாரித்தல், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல் மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு ஜி.எஸ்.டி உட்பட ரூ.1,50,000/–.

மேற்படி பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் மொத்த தோராய செலவினத் தொகை ரூ.4,50,000/— பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்ட பணிக்கு நகராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற வேண்டியதின் அவசர அவசியத்தினை முன்னிட்டு பணியினை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.8

மாங்காடு நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டின் 15வது நிதிக்குழு மான்யம் நிலுவை தொகைக்கு வழிகாட்டுதல்களில் (Operational Guidelines) Tied & Un-Tied Grant என இரண்டு வகைகளில், Tied Grant 2022-2023க்கு ரூ.77.84லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டத்தில் ரூ.72.80லட்சம் மதிப்பீட்டிற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் Un-Tied Grant 2022-2023க்கு, ரூ.51.89லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ.46.00லட்சம் மதிப்பீட்டிற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மான்யத்தொகைக்கு பின்வரும் விவரப்படி பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| **Tied Grant** | | |
| 1 | Providing and Laying of Pipeline at Vignesh Nagar | 5.04 |
| **Un-Tied Grant** | | |
| 2 | Construction of Storm water Drain at Vignesh Nagar | 5.89 |
| | **மொத்தம்** | **10.93** |

எனவே மேற்படி பணிகளை 15வது நிதிக்குழு மான்யம் 2022-23 (Tied & Un-Tied Grant) (நிலுவை தொகை) கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி உரிய கருத்துரு 18.01.2024 அனுப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.16117/2022/ண்.16117/2022/EA-2/ நாள்.02.02.2024ன்படி மேற்கண்ட இரண்டு பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு வரப்பெற்றதை தொடர்ந்து இந்நகராட்சி பொறியாளரிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் தகவலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு — மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

## பொருள் எண்.9

காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு நகராட்சியில் 2023-2024 மற்றும் 2024-2025 ஆம் ஆண்டின் 15வது நிதிக்குழு மான்யம் திட்டம் (Un-Tied Grant) ன் கீழ் ரூ.136.00லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, இந்நகராட்சி பொறியாளரால் தயாரித்து வரப்பெற்றுள்ள

பின்வரும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் தகவலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட சி.எஸ்.ஐ.பள்ளி தெரு, சி.எஸ்.ஐ.பள்ளி குறுக்கு தெரு, பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி மற்றும் மசூதி தெரு, மசூதி குறுக்கு தெரு, சுல்தான்பேட்டை ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி. | 40.87 |
| 2 | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட மேல்மாநகர், காந்தி நகர் பட்டூர் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் பணி | 36.80 |
| 3 | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பாலாஜி அவென்யூ முதல் 12வது தெரு முதல் 16வது தெரு வரை (உன்னாமலைதெரு) அம்பாள் நகர் 4வது தெரு மற்றும் 5வது தெரு (அருள் ஜோதி வள்ளலார் தெரு) கிழக்கு காமாட்சி தெரு 1வது தெரு முதல் 3வது தெரு வரை (ஸ்ரீபுரம்) தார்சாலை அமைத்தல் பணி மற்றும் சையத் சாதிக் நகர் 1வது தெரு மற்றும் 3வது தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 58.33 |
| | **மொத்தம்** | **136.00** |

அலுவலக குறிப்பு – மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

**பொருள் எண்.10**

மாங்காடு நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2023–2024ம் ஆண்டிற்கான காற்றின் தரத்தை மேம்படுத்துதல் தலைப்பின் (Ambient Air Quality) கீழ் மாங்காடு நகராட்சிக்கு ரூ.36,86,959/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் நகராட்சி பயன்பாட்டிற்காக ஜே.சி.பி வாகனம் வாங்கிக்கொள்ளவும் மான்ய தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.11**

மாங்காடு நகராட்சியில் எதிர்வரும் கோடைக்காலத்தினை முன்னிட்டு நகராட்சியில் உள்ள குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் பொது மக்கள் நலன் கருதி லாரி மூலம் குடிநீர் சப்ளை செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00லட்சம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.12**

மாங்காடு நகராட்சியில் எதிர்வரும் கோடைக்காலத்தினை முன்னிட்டு நகராட்சியில் உள்ள குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் பொது மக்கள் நலன் கருதி நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் ஆழ்துளைக் கிணறு மற்றும் பவர் பம்ப் அமைக்கவும் அதற்கான தோராய

செலவினம் ரூ.**9.60**லட்சம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.13**

மாங்காடு நகராட்சியில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் தொடர்பான தோராய செலவினம் ரூ.**9.70**லட்சம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.14**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 கடித ந.க.எண்.**14006/2021**/EAP-1, நாள்.**31.01.2024** தேதிய கடிதத்தில், திருவேற்காடு, பூவிருந்தவல்லி மற்றும் மாங்காடு நகராட்சிகளுக்கு ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்ட அறிக்கைகளை ஒருங்கிணைத்து Appriasal note, ESIA Report & Climate resilience report with due justification உடன் KFW நிதியுதவி பெறத்தக்க வகையில் தயாரித்து ஒப்புதல் பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி, மூன்று நகராட்சிகளுக்கு ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை மற்றும் KFW அனுமதி பெற தேவையான ESIA Report & Climate resilience report with due justification ஆகியவற்றுடன் உரிய அனுமதி பெற்றுதர தேவையான கலந்தாலோசகரை பூவிருந்தவல்லி நகராட்சி மூலம் அமர்த்தி மேற்படி பணியினை உடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவும், திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான செலவினத்தினை மூன்று நகராட்சிகளும் திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் பகிர்ந்து வழங்கிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அறிக்கைகள் நிதி உதவி பெற அவசியம் என்பதால், திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான செலவினத்தினை மூன்று நகராட்சிகளும் பகிர்ந்து வழங்க வேண்டிய தொகையில் மாங்காடு நகராட்சிக்கு ஒதுக்கப்படும் செலவினத்தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.15**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக நகரின் பல பகுதியில் மழைநீர் தேங்கி இருந்தது மேற்படி மழைநீர் வடியாத இடங்களில் கழிவுநீர் வாகனம் கொண்டு மழைநீரை அகற்ற வேண்டியிருந்ததால் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்பு சட்டம் **2022** பிரிவு **57(7)** ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டு ரஞ்சித் டிரான்ஸ்போர்ட் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு

வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப் பட்டதற்கான செலவின தொகை ரூ.286500/– நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கும் மேற்கண்ட பணிகள் செய்ததற்கும் மன்றத்தில் பின்னேற்பு வழங்கலாம்.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஜேசிபி இயந்திரம் கொண்டு 2023–2024ம் ஆண்டிற்கு எம்.எஸ்.ஆர். எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. 31.03.2024ல் ஒப்பந்த காலம் முடிவடைவதால் 2024 –2025 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோார பணி உத்திரவு வழங்கப்படும் வரை எம்.எஸ்.ஆர். எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவின தொகை ரூ.15.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.17**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள சொத்துவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி, காலிமனைவரி வரியில்லா இனம் மற்றும் இதர வரியினங்களை 2023–2024–ம் நிதியாண்டிற்கு நிலுவையின்றி வசூல் செய்யும் பொருட்டு தனியார் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்திடும் பொருட்டு ஆகும் செலவினம் தோராயமாக ரூ.0.90 லட்சம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.18**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள சொத்துவரி, குடிநீர்கட்டணம்,தொழில்வரி, காலிமனைவரி வரியில்லா இனம் மற்றும் இதர வரியினங்களை 2023–2024–ம் நிதியாண்டிற்கு நிலுவையின்றி வசூல் செய்ய ஏதுவாக துண்டு பிரசுரம், பல்க் எஸ்.எம்.எஸ். மற்றும் சொத்துவரி செலுத்துவபவர்களின் பெயர்களை செய்தித்தாளில் விளம்பரம் செய்தல் (Banner) ஆகிய பணிகளை மேற்கொள்ள தோராயமாக ரூ.0.75 லட்சம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.19**

மாங்காடு நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2024–2025ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் அமைக்கும்

பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2459/2024/ss–1, நாள்.01.02.2024 நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி சாலை பணிக்கு ஒப்புநோக்கு பட்டியலின்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Providing B.T Road at Vigneshwara Nagar - 180/001/R001,Thiruvalluvar City Phase - I Main Road, 180/001/R044, Kirubanandawiyar Main Road180/002/R050,Ragunathapuram 1st Street - 180/003/R145, North Ragunathapuram 2nd Street -180/002/R073, Shanthi Nagar-( Unicode-180/005/ R 281 ), Narivannam Salai,Balaji Ambal Nagar Avenue EXTN,Ambal Nagar Balaji Avenue 1th,3rd &4th Street,Sri Pandiyan Nagar (Unicode-180/006/R415,180/006/ R455,180/006/R456,180/006/R464 &180/006/R466 ) | 99.80 | திருவாளர். தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.12% குறைவு |
| | | | திருவாளர். ஆத்விக் & அசோசியேட்ஸ் | மதிப்பீடு தொகையை விட 3.08% அதிகம் |
| 2 | Providing B.T Road at Vasanthpuram Main Road ( Unicode-180/007/R329 ) , Kaligambal Nagar,Maruthi Enklaiv Road ( Unicode-180/007/R324) ,Velleeshwaran Nagar ( Unicode-180/009/R436), Velleeshwaran Nagar 2nd Street ( Unicode-180/009/R438), Harini Himalaya Road,Balaji Avenue 10th Street ( Unicode-180/010/R416 ), Devi Karumari Amman Koil Street ( Unicode-180/010/R514 ) ,Om sakthi Nagar 2nd Main Road ( Unicode-180/011/R531 ), Om sakthi Nagar 3rd Main Road ( Unicode-180/011/R532 ) ,Om sakthi Nagar Annex 4th Cross Street ( Unicode-180/011/R539 ) , Veera Anjanaryar Kovil Street ( Unicode-180/012/R580 ) & Mariamman Koil Street ( Unicode-180/017/R763 ) | 99.50 | திரு.எம்.கார்த்திக் | மதிப்பீடு தொகையை விட 0.01% குறைவு |
| | | | திருவாளர். தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 2.53% அதிகம் |
| 3 | Providing B.T Road at Chakkara Nagar, Meenatchi Street ( Unicode-180/016/R725 to 180/016/R717), Selvaganapathy Nagar ( Unicode-180/017/R747 & 180/017/R801) ,Muthusamy Avanue & Annex ( Unicode-180/021/R933 to 180/021/R940), Melanda Madaveethi ( Unicode - 180/019/R157), Balamurugan Nagar ( Unicode-180/021/R913 to 180/021/R918) , Chinnapa Nagar,Charles Nagar 1st Street ( Unicode- | 99.30 | திருவாளர் .எம்.ஆர்.என் .இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.04% குறைவு |
| | | | திருவாளர். தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 2.48% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 180/021/R1155) ,KK Nagar ( Unicode-180/023/R1042 ) ,Ranganathan Nagar, Govindaraj Nagar Main Road ( Unicode-180/024/R1062 ) | | | |
| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
| 4 | Providing BT Road at Banu Nagar 4th street, Alex Nagar 1st Street ( Unicode- 180/025/R1141) , Quaid-E- Milath Nagar 2nd street ( Unicode-180/026/R1184 ),Quaid-E- Milath Nagar 1st to 3rd Cross street ( Unicode-180/026/R1175 to 180/026/R1177 ),Santhi Nagar ( Unicode-180/027/R1239 50 to 180/027/R1244 & 180/027/R1256 ) ,Indra Nagar 5,6 Cross Street ( Unicode-180/027/R1211 & 180/027/R1214 ) , Indra Nagar OAK street ( Unicode-180/027/R1212 ) , Indra Nagar Haji Mugaidhen Hishak street 2nd street ( Unicode- 180/027/R1213 ) , Hishak Shathick street 5th cross street ( Unicode-180/027/R1258 ) ,SKM main Road 1st street to 6th street ( Unicode- 180/027/R1217 to 180/027/R1223 ),East Ashock avenue and Meenatchi Nagar Unicode(180/004/R183) | 89.24 | திருவாளர். ஆத்விக் & அசோசியேட்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.13% குறைவு |
| | | | திருவாளர். தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 3.00% அதிகம் |

அலுவலக குறிப்பு **:–** அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

**ஆ)** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.20**

மாங்காடு நகராட்சியில் வருடாந்திர அடிப்படையில் பின்வரும் விவரப்படியான பணி மேற்கொள்ள **27.12.2023** ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியலின் படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தல் பணி | 700000 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி. | மதிப்பீடு தொகையை விட 0.15% குறைவு |
| | | | திருவாளர். H.K.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.50% அதிகம் |

அலுவலக குறிப்பு **:–** அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம்

அனுமதிக்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.21**

மாங்காடு நகராட்சி 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி 38188 மொத்த 8.40 சதுர கி.மீ பரப்பளவு ஆகும் . தற்போதைய மக்கள் தொகை சுமார் 58068 ஆகும். நகராட்சியில் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் கொண்டு நகராட்சியில் உள்ள இடங்களில் 36 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் மூலம் தண்ணீர் எடுக்கப்பட்டு 4 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலமாகவும் மற்றும் நேரடி விநியோகமாகவும் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. கூடுதலாக திரவ குளோரின் தண்ணீரில் கலந்து (inject motor) மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் நல்லமுறையில் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேலும் வருகின்ற 2024–2025 ஆம் ஆண்டு கோடைகால வறட்சியை சமாளிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.61/2017/மாதி3 நாள்.20.02.2024ன்படி மாங்காடு நகராட்சியில் கீழ்கண்ட இடங்களில் கூடுதலாக ஆழ்துளை கிணறு அமைத்து பொது மக்களுக்கு தண்ணீர் குடிநீர் வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சி.டி.எ கார்டனில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின்மோட்டார் அமைத்தல் | 200000/- |
| 2 | எ.எஸ்.ஆர் நகரில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின்மோட்டார் அமைத்தல் | 200000/- |
| 3 | மேல்ரகுநாதபுரத்தில் ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மின்மோட்டார் அமைத்தல் | 200000/- |

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.22**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் தூய்மை இந்தியா திட்டம் (SBM.2.0) பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக குப்பைகளை தரம் பிரித்து வழங்குதல் பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்தல், சுகாதார கல்வி வழங்குதல் மேற்படி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன மேற்கண்ட நிகழ்ச்சிகள் மேற்கொள்ள தேவையான Handbills, Flex Board, Banners, T. Shirt, Cap ஆகியன அவ்வப்போது தேவைப்படுகிறது. மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. விவரம் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனத்தின் விவரம் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | பூபால் டிஜிட்டல் | குறைவு |
| 2 | தேவா ஆர்ட்ஸ் | அதிகம் |

| | | |
|---|---|---|
| 3 | அப்பு ஆர்ட்ஸ் | அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கப்பட்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :— மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.23**

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. கொசுப்புழுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் கைத்தெளிப்பான் (Hand Sprayer) புதிதாக வாங்கிட விலைப்புள்ளி கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனத்தின் விவரம் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீவிநாயகா ஏஜென்சிஸ் | குறைவு |
| 2 | ஓம்சக்தி எண்டர்பிரைசஸ் | அதிகம் |
| 3 | T.A.ஏஜென்சிஸ் | அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கப்பட்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

அலுவலக குறிப்பு :— மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.24**

மாங்காடு நகராட்சியில் 2023—2024ஆம் ஆண்டு பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள பொறியாளரால் தயாரித்து வரப்பெற்றுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சி எம்.சி.சி மற்றும் ஆர்.ஆர்.சி அருகில் உள்ள பொதுக்கழிப்பிடத்திற்குமற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணி | 2.50 |
| 2 | வசந்தபுரம் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 2.50 |
| 3 | காமாட்சிஅம்மன் 5வது தெருபேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 3.60 |
| 4 | காமாட்சிஅம்மன் நகர் விரிவு குறுக்கு தெருபேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 2.20 |
| 5 | காமாட்சிநகர் 2வது அவென்யூதார்சாலைஅமைத்தல் | 2.10 |
| 6 | காமாட்சிநகர் 3வது குறுக்கு தெருபேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 9.10 |
| 7 | முருகன் தெருதார்சாலைஅமைத்தல் | 10.20 |
| 8 | சாந்திநகர் 3வது தெருமற்றும் 3வது குறுக்கு தெருமழைநீர் கால்வாய்மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 6.30 |
| 9 | மேல்தெருவில்மினிOHT க்கு பிளாட்பார்ம் அமைத்தல் | 0.70 |
| 10 | வெள்ளீஸ்வரர் நகர் 1,2,3 வது குறுக்கு தெருதார்சாலைஅமைத்தல் | 11.20 |
| 11 | மாங்காடுநகராட்சியின் மழைநீர் வடிகால் நடைபெற்ற இடங்களில் குடிநீர் பைப்லைன் சீரமைத்தல் பணி | 10.00 |

| | | |
|---|---|---|
| 12 | கே.கே.நகர் 1வது, 2வது, 3வது மற்றும் 5வது தெருவில்பேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 17.20 |
| 13 | RCCபைப் சிறுபாலம் அமைத்தல் | 0.85 |
| 14 | அருணாச்சலம் நகர் போர்வெல் அமைத்தல் | 1.50 |
| 15 | மேல்ரகுநாதபுரம் நவீன குடிநீர் சுத்திகரிப்நிலையம் (RO Plant) அமைந்துள்ள இடத்தில் போர்வெல் அமைத்தல் | 4.80 |
| 16 | முதலமைச்சர் காலை உணவு சமையற் கூட கட்டிடத்தில் பெயர் பலகை அமைத்தல் மற்றும் இதர பணிகள் | 3.60 |
| 17 | 15வது வார்டு பத்மாவதி நகர் குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 5.25 |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 18 | கிருஷ்ணா நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 8.10 |
| 19 | வன்னியர்பட்டு பஜணை கோயில் தெரு சிமெண்ட் சாலை உயர்த்துதல் | 6.40 |
| 20 | லீலாவதி நகர் குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 2.25 |
| 21 | ஏ.எஸ்.நகர் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 8.20 |
| 22 | சாந்தி நகர் பட்டூர் மூன்றாவது தெரு மூன்றாவது குறுக்கு தெரு தார்சாலைஅமைத்தல் | 10.40 |
| 23 | பட்டூர் இஷாக் நகர், ஹாஜி அலி நகர் மற்றும் பஜணை கோயில் தெரு ஆகிய பகுதிகளில் கப்பி சாலை அமைத்தல் | 2.10 |
| 24 | எஸ்.கே.ஆர். ஸ்டெப் ஸ்டோன்ஸ் புதியதாக தெருமின் விளக்கு அமைத்தல் | 11.00 |
| 25 | பட்டூர் பேரூந்து நிலையத்தில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 3.10 |
| 26 | வாலாஜா தெருவில் இருந்து அம்பாள் நகர் செல்லும் வழி வரை மழைநீர் வடிகால் அமைத்தல் | 6.20 |

அலுவலக குறிப்பு :— மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.25**

மாங்காடு நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் திட்டம் 2023–24 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2459/2024/ss–1, நாள்.01.02.2024 நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி சாலை பணிக்கு ஒப்புநோக்கு பட்டியலின் படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Proving and Laying of Paver Block Road at CSI Street( Unicode- 180/023/R1055) CSI Cross Street ( Unicode-180/023/R1056) and Providing CC Pavement at Masuthi Street( Unicode- 180/027/R136) Masuthi Cross Street ( Unicode- 180/027/R1200), SultanPettai( Unicode-180/026/R1196) in Mangadu Municipality | 40.87 | திரு.பி.சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 0.02% குறைவு |
| | | | திருவாளர். தில்லை நடராஜா ரோடு கன்ஸ்டிரக்ஷன்ஸ் பிரைவேட் லிட்., | மதிப்பீடு தொகையை விட 3.00% அதிகம் |
| 2 | Providing B.T Road at Melma Nagar Gandhi Nagar | 36.80 | திருவாளர் | மதிப்பாய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ( Unicode- 180/018/R840) Pattur Main Road ( Unicode-180/025/R1121) in Mangadu Muncipality, | | எஸ்.வி.என். இன்பிரா | செய்ததில் தகுதியின்மை காரணமாக ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது |
| | | | திருவாளர். எம்.ஆர்.என். இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட **0.15%** குறைவு |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 3 | Providing B.T Road at Balaji Avenue 12th street to 16th Street( Unnamalai Street)(180/009/R445 to 180/009/R451) ,Ambal Nagar 4th street and 5th Street( arul jothi Vellalar Street)(180/009/R399,180/009/R400), Balaji Avenue 12th street to 16th Street( Unnamalai Street))(180/009/R445 to 180/009/R451), and Paver block road at Syed Sathik Nagar 1st Street & 3rd Street ( Unicode- 180/012/R559,180/012/R562)in Mangadu Muncipality | 58.33 | திருவாளர். மேனகா அன் கோ | மதிப்பீடு தொகைக்கே |
| | | | திருவாளர். எம்.ஆர்.என். இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட **0.69%** அதிகம் |

அலுவலக குறிப்பு :– அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.26**

மாங்காடு நகராட்சியில் **2024–2025**ஆம் ஆண்டிற்கு பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பின்வரும் இனங்களுக்கு ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் பொறுத்தப்பட்டுள்ள குளோரினேட்டர்களுக்கு திரவ குளோரின் சப்ளை செய்தல். | 9.50 |
| 2. | வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் பராமரிப்பு மற்றும் பணிக்கு தேவையான உதிரி பொருட்கள் சப்ளை செய்தல் மற்றும் மோட்டார் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளுதல். | 9.00 |
| 3 | வார்டு எண்.15 முதல் 27 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் பராமரிப்பு மற்றும் பணிக்கு தேவையான உதிரி பொருட்கள் சப்ளை செய்தல் மற்றும் மோட்டார் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளுதல். | 9.00 |

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.27**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக மழைநீர் தேங்கி குப்பைகள் அகற்றபடாமலும், மரக்கிளைகளும் ஆங்காங்கே அதிக அளவில் குவிந்தும் காணப்பட்டன எனவே மேற்படி தேங்கியுள்ள குப்பைகள் மற்றும் மரக்கிளைகள் பொதுமக்களுக்கு தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேற்படி குப்பைகள் மற்றும் மரக்கிளைகளை உடனடியாக அகற்றிட அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்பு சட்டம் 2022 பிரிவு 57(7) ன்படி ஜேசிபி மற்றும் லாரி வாகனம் கொண்டு குப்பைகள் அகற்றும்

பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் S.J.Agency என்ற நிறுவனம் குறைவான விலைப்புள்ளி கொடுக்கப்பட்டதால், மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. எனவே மேற்படி பணிகளை நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதற்கும் அதற்கான செலவின தொகை ரூ. 4,70,375/—க்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

அலுவலக குறிப்பு :— மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்.28**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வடகிழக்கு பருவ மழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக நகரின் பல பகுதிகளில் தண்ணீர் தேங்கி இருந்ததால் குப்பைகள் மற்றும் மரக்கிளைகள் உடனடியாக அப்புறப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பொது சுகாதாரப்பணிகள் பாதிக்கப்பட்டு பொது மக்களுக்கு தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்படும் சூழல் நிலவியது. மேலும் பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளீச்சிங் பவுடர் ஆகியன குறைவான அளவே இருந்தது. எனவே குப்பைகளை உடனடியாக அப்புறப்படுத்தி கிருமிநாசினிகள் தெளிக்க வேண்டியிருந்ததால் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்பு சட்டம் 2022 பிரிவு 57(1) ன்படி கிருமிநாசிகிள் வாங்கி வழங்கும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் MRR Suppliers என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு கிருமிநாசினிகள் வாங்கி வழங்கப்பட்டது. எனவே மேற்படி பணியினை நகரமன்றத்தின் எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதற்கும், அதற்கான செலவின தொகை ரூ.4,95,000/—க்கும் மன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :— மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.29**

மாங்காடு நகராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்திற்கு 12 பள்ளிகளில் முகாம் நடத்திட தேவையான அடிப்படை வசதிகளான சேர், டேபிள், சேர்மினா பந்தல், மின்விசிறி, பிளக்பாயிண்ட் மற்றும் மரத்தினால் ஆன சாய்தளம் அமைத்தல் போன்ற பணிகளுக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருமதி.அமுதா விலைப்புள்ளி தாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு பட்டியல் தொகை ரூ.3,51,398/— வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :— மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.30**

மாங்காடு நகராட்சியில் 2024—2025 பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் |
|---|---|
| 1 | வார்டு எண்.2 சக்தி நகர் பூங்கா மேம்பாடு செய்தல் |
| 2 | வார்டு எண்.3 சக்தி நகரில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் (R.O) அமைத்தல் |
| 3 | வார்டு எண். 8ல் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் (R.O) அமைத்தல் |

| | |
|---|---|
| 4 | செல்வகணபதி நகர் வார்டு எண்.17 பூங்கா பணி செய்தல் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் (R.O) அமைத்தல் |
| 5 | அனைத்து வார்டுகளிலும் நகராட்சிகளின் சார்பில் அமைக்கப்பட்ட கேமராக்கள் பழுது நீக்கல் மற்றும் புதிதாக அமைத்தல் |
| 6 | வார்டு எண்.6 நரிவனம் சாலையில் புதிதாக ரேசன் கடை அமைக்க சட்ட மன்ற உறுப்பினர் நிதியில் அமைத்தல் |
| 7 | வார்டு எண்.5ல் பத்திரிமேடு பகுதியில் உள்ள மேல்நிலை குடிநீர் தொட்டி அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் உடற்பயிற்சி கூடம் அமைத்தல். |
| 8 | வார்டு எண்.15ல் ரகுநாதபுரம் பகுதியில் ஏற்கனவே உள்ள கழிப்பிடம் பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அதனை புதிதாக அமைத்தல் |
| 9 | வார்டு எண். 2ல், வார்டு எண்.14 மற்றும் வார்டு எண்.27 ல் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் |
| 10 | பட்டூர் பானு நகர் மழைநீர் வடிகால் அமைத்தல். |
| 11 | வார்டு எண்.25ல் உள்ள வன்னியர்பட்டு பஜணை கோயில் தெருவின் அருகில் உள்ள குளத்திலிருந்து மழைக்காலங்களில் நீர் நிரம்பி வெளியேறும் மழைநீரை தடுக்க தடுப்பு சுவர் அமைத்து தருதல். |

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

### பொருள் எண்.31

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள சொத்துவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி, காலிமனைவரி வரியில்லா இனம் மற்றும் இதர வரியினங்களை 2023–2024–ம் நிதியாண்டிற்கு நிலுவையின்றி வசூல் செய்ய ஏதுவாக துண்டு பிரசுரம், பல்க் எஸ்.எம்.எஸ். மற்றும் சொத்துவரி செலுத்தாதவர்களின் பெயர்களை செய்தித்தாளில் விளம்பரம் செய்தல், பிளக்ஸ் (Banner) ஆகிய பணிகளை மேற்கொள்ள தோராயமாக ரூ.0.75 லட்சம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

### பொருள் எண்.32

மாங்காடு நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் –2022–2023 நிதி திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.16117/2022/நுஹ–2, நாள்.02.02.2024 நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து 26.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணிக்கு ஒப்புநோக்கு பட்டியலின் படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | விக்னேஷ் நகர் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 589000/- | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி | மதிப்பீடு தொகையை விட **0.04%** குறைவு |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட **0.86%** அதிகம் |
| 2 | விக்னேஷ் நகர் குடிநீர் பைப்லைன் அமைத்தல் பணி | 504000/- | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி | மதிப்பீடு தொகையை விட **0.10%** குறைவு |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட **0.35%** அதிகம் |

அலுவலக குறிப்பு **:–** அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

**ஆ)** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.33**

மாங்காடு நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான **12**ஏ டோனர்கள் **50** எண்ணிக்கை, கலர் டோனர்கள் (கலர் ஒன்று ஐந்து வீதம்) மொத்தம் **20** டோனர்கள் மற்றும் A4 பேப்பர்கள் **–200**ரீம்கள், Legal Size - 1**00**ரீம்கள் மற்றும் A3 பேப்பர்கள் **–5**ரீம்கள் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு அச்சகத்தில் விலைப்புள்ளி பெற்று வாங்கி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**8.70**லட்சம் பொது நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு **:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.34**

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு பேரூராட்சி அரசாணை (நிலை) எண்.**94** நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.**01.11.2021–**ன்படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அரசாணை (நிலை) எண்.**127** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை **16.12.2021–**ன்படி**27** வார்டுகளாக மறுவரையறை செய்யப்பட்டதை தொடர்ந்து, மாங்காடு நகராட்சி மொத்தம் **8.40** சதுர.கி.மீ பரப்பளவு கொண்டதாகும். **2011**ன்படி மக்கள்தொகை **38188** தற்போதைய மக்கள்தொகை **58068** ஆகும். எனவே நகராட்சி பொறியாளருக்கு சாலைப்பணிகள், மழைநீர்வடிகால் பணிகள், குடிநீர் விநியோகப்பணிகள், தெருமின்விளக்கு பராமரிப்பு பணிகள் மற்றும் அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் திட்டம் ஆகியவற்றை கள ஆய்வு மேற்கொண்டு பொறியியல் தொடர்பான பணிகளை நிறைவேற்ற ஏதுவாக மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கு நகராட்சி பொறியாளருக்கு ஈப்பு வாகனம் வாங்க நகரமன்ற தீர்மானம் எண்.**428** நாள்.**31.07.2023**ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**35343/2023/**எம்எ**1**, நாள்.**19.10.2023**ன்படி நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு எண்ணம் ஈப்பு வாகனம் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**35343/2023/**எம்எ**1**, நாள்.**19.10.2023–**ன்படி நகராட்சி பொறியாளர் அலுவலகப்பயன்பாட்டிற்கு புதிதாக ஒரு எண்ணம் ஈப்பு வாகனம் MAHINDRA BOLERO B6(O)BS-VI AC (TOP MODEL) வாங்க அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து

M/s.MAHINDRA& MAHINDRA LTD, நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.**973461/—**மற்றும் வாகன பதிவு கட்டணம், சாலைவரி கட்டணம், வாகன காப்பீட்டு கட்டணம் செலுத்த தோராய செலவினம் ரூ.**2.10** இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ. **11,83,461/—** தற்சமயம் வடகிழக்கு பருவ மழை என்பதால் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூ.**11,83,461/—**வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மான எண்.494 நாள்.12.01.2024. தற்போது நகராட்சி பொறியாளருக்கான ஈப்பு வாகன பதிவு கட்டணமாக பட்டியல் தொகை ரூ.197740/— வரப்பெற்றுள்ளது. மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் ரூ.20340/— செலவினத்தை விட மிகையாக உள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மிகையாக உள்ள வாகன பதிவு கட்டணம் ரூ.20340/— செலவினத்தை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**— நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.35**

மாங்காடு நகராட்சி 'ஆ' கிராமம் சர்வே எண்.296/2A & 2B ல் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடித எண்.Layout-1/0285/2023, நாள்.**08.02.2024**ன்படி சர்வே எண்.296/2A & 2B ல் **8** மனைகள் அங்கீகரித்து தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் **493**சதுர மீட்டர் அளவில் சாலைகளுக்கு தானப்பத்திரம் (Gift deed) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு தேவையான சாலை, தெருவிளக்கு, வடிகால் மற்றும் குடிநீர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் தாங்களாகவே அமைத்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, M/s.Devi Developers and M/s.Kasuma Enterprises Pvt., Ltd., திரு.டி.நரேஷ்குமார் என்பவருக்கு, நகராட்சி பொறியாளர் மதிப்பீட்டில் சுட்டிக்காட்டப்பட்ட கட்டணங்களையும் மாங்காடு நகராட்சி துணை விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கான செண்டேஜ் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களையும், வசூலித்து மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**நகரமன்ற தலைவர்**
**மாங்காடு நகராட்சி**